**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22.03.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகதில் உலக தண்ணீர் தினவிழா**

உலக தண்ணீர் தினம் மற்றும் முனைவர்.ஆர்.கே.சிவனப்பன் என்டோவ்மென்ட் சொற்பொழிவானது 22.03.2021 அன்று கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாணமைப் பல்கலைக்கழகத்தில் உள்ள நீர்நுட்ப மையத்தால் ஏற்பாடு செய்து கொண்டாடப்பட்டது.

இந்த விழாவிற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் செயல் துணைவேந்தர் முனைவர்.ஏ.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமை தாங்கி உரையாற்றினார். உலக அளவில் 22 மில்லியன் மக்கள் பாதுகாப்பான குடிநீரை பேணுவதில் சிரமம் மேற்கொள்கின்றனர் மேலும் 2.6 மில்லியன் மக்கள் தண்ணீரை சேகரிக்க குறைந்தபட்சம் 30 நிமிடங்களுக்கு மேல் செலவிடுகின்றனர். சர்வதேச விதிமுறைகளின் படி ஆண்டுக்கு 1700 மீ$^3$க்கும் குறைவாக உள்ள தனி நபர் நீர் கிடைக்கும் நாடுகள் தண்ணீர் பற்றாக்குறை நாடாக வகைபடுத்தப்பட்டுள்ளன. அதில் இந்தியாவின் தனிநபர் நீர் கிடைக்கும் அளவு 1545 மீ$^3$ என்பது இந்தியாவை ஒரு நீர் வறட்சி நாடாகவே எடுத்துக்காட்டுகிறது.

இந்தியா ஒரு விவசாய நாடாக இருப்பதால் நீர்ப்பாசனம் என்பது மிகப்பெரிய அளவில் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவின் மொத்த நீர் தேவைகளில் 78 சதவீதம் நீர்ப்பாசனத்திற்காகவும் 6 சதவீதம் உள்நாட்டு உபயோகத்திற்காகவும் 5 சதவீதம் தொழில் துறைக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. இத்தருணத்தில் காலநிலை மாற்றம், மாசுபாடுமற்றும் பற்றாக்குறையின் காரணமாக நீரின் தேவைஅதிகரித்து வருவதைநாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இதுவே தண்ணீரை பாதுகாக்கவும், மதிப்பிடவும் உரியநேரம். ஒரு ஜீன்ஸ் காலனியை உற்பத்தி செய்ய 10,000 லிட்டர் தண்ணீர் செலவு செய்யப்படுகிறது. இது ஒரு நபர் பத்து ஆண்டுகளுக்கு குடிப்பதற்கு தேவைப்படும் நீரின் அளவாகும். ஆகவே ஒவ்வொரு குடிமகனும் நீரை பயன்படுத்துவதும் அதை மாசுபடுத்தாமல் உட்கொள்வதும் இன்யமையாததாகும். தண்ணீர் என்பது ஒவ்வொரு நபருக்கும் வெவ்வேறு செய்திகளை அறிவிக்கிறது. எனவே

உலக தண்ணீர் தினத்தன்று தண்ணீர் குறித்த அனைத்து நற்செய்திகளையும் தெரிந்து தண்ணீரைக் கொண்டாடுவோம். இன்று ஒரு சொட்டு நீரை சேமிப்பது நாளை ஒருவரின் தாகத்தை தணிக்கும் என்பதை மறந்து விடக்கூடாது.

இந்த உலகநீர் தினத்தில், கடந்த 40 ஆண்டுகளாக அங்கக வேளாண்மை செய்வதில் தன்னை அர்ப்பணித்ததற்காக முன்னோடி விவசாயிகளான திரு.டி.பாலமுருகன், முசிறி மற்றும் திரு.எல். திருநாவுக்கரசு, குண்ணவாக்கம் அவர்களை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக செயல் துணைவேந்தர் முனைவர்.ஏ.எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்களால் சிறப்பிக்கப்பட்டார்கள். மேலும் திருமதி. வனிதாமோகன், தலைவர் (Pricol Ltd) மற்றும் நிர்வாக அறங்காவலர்(சிறுதுளி), முனைவர். J.S.கென்னடி, முதன்மையர் முதுகலை பட்டபடிப்பு, திரு.எஸ்.பி.ராஜாகுமாரன், இயக்குநர் (Mobitech Wireless Solution), முனைவர்.கி.சி.சுப்ரமணியன், ஆராய்ச்சி இயக்குநர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். முனைவர் K. பழனிச்சாமிஎமிரிட்டஸ் விஞ்ஞானி அவர்கள் வாழ்த்துரை வழங்கி பேராசிரியர் R.K.சிவனப்பன் என்டோமென்ட் சொற்பொழிவு ஆற்றினார்.

இவ்விழாவில் உலக தண்ணீர் தினத்தின் அறிமுக கருத்துகளுடன் பங்கேற்ற அனைவரையும் நீர் நுட்பமைய இயக்குநர் முனைவர். ச. பன்னீர்செல்வம் வரவேற்றார். முனைவர்.சா.வின்சென்ட், பேராசிரியர் அவர்கள் நன்றி உரை ஆற்றினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்